Queensland Government

mhrt Mental Health Review Tribunal

# என்னுடைய மனநல ஆரோக்கிய மறுஆய்வு நடுவர் மன்ற விசாரணையில் நான் என்ன எதிர்பார்க்கலாம்

## MHRT விசாரணை என்றால் என்ன?

மனநல ஆரோக்கிய மறுஆய்வு நடுவர் மன்ற (**நடுவர் மன்றம்** அல்லது **MHRT என்றும் சொல்கிறார்கள்) மன்றம் என்பது ஒரு சுதந்திரமாக முடிவு எடுக்கும் அமைப்பாகும்.** இது சுகாதாரச் சேவைத் துறை அல்லது சிகிச்சையளிக்கும் குழுவின் ஓர் அங்கமல்ல.

ஒரு MHRT விசாரணையில், MHRT உங்களது அனிச்சையான அதிகாரம்/உத்தரவு குறித்த முடிவை எடுக்கும். முடிவு எடுப்பவர்களைத் தான் உறுப்பினர்கள் என்று சொல்கிறோம். உறுப்பினர்கள் என்போர் வழக்கறிஞர்களாகவோ, மருத்துவர்களாகவோ அல்லது சமுதாய அங்கத்தினர்களாகவோ இருக்கலாம். சமுதாய அங்கத்தினர் என்பவர், மருத்துவராகவோ அல்லது வழக்கறிஞராகவோ இல்லாமல் இருந்து, முடிவு எடுப்பதில் உதவுமளவிற்கு உரிய அனுபவமுள்ளதோர் நபராவார்.

உங்களிடமிருந்தும், உங்களுக்குச் சிகிச்சையளிக்கும் குழுவினரிடமிருந்தும் கிடைக்கிற தகவல்களை MHRT கேட்டுத் தெரிந்து கொள்கிறது. MHRT எடுக்கும் முடிவுகளாவன:

1. நீங்கள் தொடர்ந்து உங்களது அதிகாரம்/உத்தரவில் இருக்க வேண்டுமா இல்லையா; என்பதோடு
2. எங்கே உங்களுக்கான சிகிச்சை மற்றும்/அல்லது கவனிப்பைப் பெற்றுக் கொள்கிறீர்களா (உ.ம். நீங்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக தங்க வேண்டியுள்ளதா இல்லையா).

தடயவியல் உத்தரவில் இருக்கிறவர்களைப் பொருத்த வரையில், MHRT -யும் பின்வருவனவற்றை முடிவு செய்யும்:

1. மருத்துவமனையில் இருக்கிற நோயாளிகளைப் பொருத்த வரையில், அவர்களுக்கு சமுதாயத்தில் எவ்வளவு விடுப்பு கிடைக்கும்; என்பதோடு
2. ஆணையின் நிபந்தனைகள் (உ.ம். அவர் என்னென்ன செய்யலாம் என்னென்ன செய்யக்கூடாது).

MHRT ஆல் உங்களது மருந்துகள் குறித்தோ மருந்தின் அளவு குறித்தோ முடிவு எடுக்க முடியாது.

## என்னுடைய விசாரணை என்றும், நான் போக வேண்டுமா என்றும் நான் எவ்விதம் தெரிந்து கொள்வது?

உங்களது விசாரணை எப்போது இருக்கும் என்றும், எங்கு இருக்கும் என்பதையும் சொல்லி உங்களுக்கு ஒரு அறிவிப்புக் கடிதம் வரும்.

பொதுவாக விசாரணையை உங்கள் பகுதி மருத்துவமனை அல்லது சமுதாய மனநலச் சுகாதார மையத்தில் வைத்தே நடத்துவார்கள். உங்களது விசாரணையை நேரில் நடத்தலாம் அல்லது தொலைபேசியிலோ அல்லது காணொளிக் காட்சியிலோ நடத்தலாம். நீங்கள் தொலைபேசியிலோ அல்லது காணொளி காட்சியிலோ விசாரணை நடத்த விரும்புகிறீர்கள் என்றாலோ, தயவுசெய்து MHRT-யைத் தொடர்பு கொள்ளுங்கள்.

நீங்கள் உங்களது விசாரணைக்குச் செல்ல வேண்டியதில்லை, ஆனாலும் உங்கள் கருத்தைத் தெரிவிப்பதற்கு இது ஒரு நல்ல வாய்ப்பாகும். நீங்கள் உங்கள் விசாரணைக்குத் தனியாகச் செல்ல வேண்டியதில்லை. நீங்கள் உங்களைக் கவனித்துக் கொள்பவர், குடும்ப உறுப்பினர் அல்லது நண்பர் ஒருவரைத் துணைக்கு அழைத்துச் செல்லலாம். உங்களால் விசாரணைக்கு வர முடியவில்லை என்றால், அப்போதும் உங்களால் சுய-அறிக்கைப் படிவம் வாயிலாக, அல்லது மின்னஞ்சல் அல்லது கடிதம் ஒன்றை அனுப்புவதன் வாயிலாக MHRT -க்கு உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். நீங்கள் விசாரணைக்குச் செல்லவில்லை என்றால், அப்போதும் MHRT ஆல் முடிவெடுக்க முடியும்.

## எனது விசாரணைக்கு முன் நான் என்ன செய்ய வேண்டும்?

நீங்கள் சுய-அறிக்கைப் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்து அனுப்ப விரும்புகிறீர்கள் என்றால், அதை நீங்கள் உங்களது விசாரணைக்கு முன்பே பூர்த்தி செய்து அனுப்பிவிட வேண்டும். உங்களது விசாரணைக்கு முன்பே உங்களது ஒரு நகலை அனுப்பி வைத்து விடுவார்கள். நீங்கள் இந்தப் படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கான உதவியை உங்களைக் கவனித்துக் கொள்பவரிடமிருந்தோ, குடும்பத்தினரிடமிருந்தோ அல்லது நண்பர்களிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் இந்தப் படிவத்தை உங்கள் விசாரணைக்கு முன்பே MHRT -க்கு அனுப்பி வைக்கலாம் அல்லது அதை விசாரணையன்று அவர்களிடம் கொடுத்து விடலாம்.

உங்களுக்கு சிகிச்சையளிக்கிற குழுவினர், உங்களது சுகவீனம் / ஊனம் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்ததோர் அறிக்கையை அனுப்பி வைக்க வேண்டும். அவ்விசாரணைக்குக் குறைந்த பட்சம் 7 நாட்களுக்கு முன்பாகவாவது அதன் நகல் ஒன்றை அவர்கள் கொடுத்தாக வேண்டும். நீங்கள் அதைப் படித்துப் பார்த்துவிட்டு, கேள்விகள் எதுவும் கேட்க வேண்டியிருந்தால், உங்களுக்குச் சிகிச்சையளிக்கிற குழுவினரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அது குறித்து நீங்கள் உங்களது சுய-அறிக்கைப் படிவத்திலும் தெரிவிக்கலாம். நீங்கள் இந்த அறிக்கையை வாசித்துப்

பார்ப்பதற்கான உதவியை உங்களைக் கவனித்துக் கொள்பவரிடமிருந்தோ, குடும்பத்தினரிடமிருந்தோ அல்லது நண்பர்களிடமிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

விசாரணையில் உங்களோடு கூடக் கலந்து கொள்வது குறித்து உங்களுக்கு உதவி புரிபவர்கள் மத்தியில் உங்களுக்கென நியமித்தவர்கள் அல்லது மற்றவர்களிடம் பேசிக்கொள்ளவும் செய்யலாம். உங்களுக்குப் பிரதிநிதியாகச் செயல்பட நீங்கள் ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்து கொள்ளலாம், இருந்தாலும் அதற்கு அவசியமில்லை. ஒருசில சூழ்நிலைகளில், MHRT உங்களுக்காக ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்யலாம். அப்படி நேர்கிற நிலையில், அந்த வழக்கறிஞரே உங்களை நேரடியாகத் தொடர்பு கொள்வார். உங்கள் விசாரணையில் பிரதிநியாகச் செயல்படுவது குறித்த இன்னும் அதிகத் தகவல்களுக்கு, MHRT-யின் இணையதளத்திற்குச் சென்று பாருங்கள் அல்லது உங்களுக்குச் சிகிச்சையளிக்கிற குழுவினரிடம் கேளுங்கள்.

## எனது விசாரணையில் என்ன நடக்கும்?

MHRT விசாரணை என்பது, நீதிமன்றம் போல் முறைப்படியானதல்ல. நீங்கள் கூட்ட அறை ஒன்றில், ஒரு மேசையைச் சுற்றி அமர்ந்திருப்பீர்கள்.

விசாரணையில் இரண்டிலிருந்து நான்கு பேர் வரையான MHRT உறுப்பினர்களும், அதே போல உங்களுக்குச் சிகிச்சையளிக்கிறவர்களும் இருப்பார்கள். உங்களுக்கென்று உதவியாள் ஒருவரையும், சட்டப்பூர்வப் பிரதிநிதி ஒருவரையும் வைத்துக் கொள்ளலாம். MHRT உறுப்பினர்கள் உங்களோடு அந்த அறையிலேயே இருக்கலாம் அல்லது அவர்கள் தொலைபேசி அல்லது காணொளி இணைப்பு வாயிலாக உங்களோடு விசாரணையில் சேர்ந்து கொள்ளலாம். நீங்கள் தடயவியல் உத்தரவு அல்லது விசாரணை மறுஆய்வு உடற்தகுதிக்காக விசாரணைக்கு வந்திருக்கிறீர்கள் என்றால், தலைமை நீதிபதியின் அலுவலகப் பிரதிநிதி ஒருவரும் அதில் கலந்து கொள்ளலாம்; அவர்களது பங்கு, சமுதாய நலனின் பிரதிநிதியாக இருப்பதேயாகும்.

இவ்விசாரணை தனிப்பட்ட விசயமேயாகும், ஆகவே உங்களது சிகிச்சைக்கு, கவனிப்பிற்குத் தொடர்பில்லாதவர்கள் இந்த அறையில் இருக்க முடியாது.

உறுப்பினர்கள் உங்களிடம் தங்களை அறிமுகம் செய்து கொள்வார்கள், அவ்வகையில் அவர்களை எப்படிக் கூப்பிடுவது என்பதை நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். "மேன்மை தாங்கிய" போன்ற முறைப்படியான சொற்களைப் பயன்படுத்துவதற்கான அவசியம் ஏதுமில்லை.

MHRT உறுப்பினர்கள் உங்களிடமும், உங்களது உதவியாளரிடமும், உங்களுக்குச் சிகிச்சையளிக்கும் குழுவினரிடமும் பேசி, உங்களது முன்னேற்றம் குறித்த கேள்விகளைக் கேட்டுத் தெரிந்து கொள்வார்கள். அவ்வுறுப்பினர்களிடம் உங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பை உங்களுக்குத் தருவார்கள். நீங்கள் அவர்களிடம் நேரடியாகவோ, உங்கள் பிரதிநிதி வாயிலாகவோ அல்லது

இருவிதத்திலுமோ பேசலாம். உங்களுக்குச் சிகிச்சையளிக்கிற குழுவினரிடக், உங்கள் முன்னேற்றம், சிகிச்சை மற்றும் கவனிப்புத் தேவைகள், மீண்டு வருவது குறித்து அவர்களது கருத்தைச் சொல்லும்படி கேட்போம்.

அதன் பின் MHRT உறுப்பினர்கள் தங்கள் முடிவை எடுக்கையில், உங்களிடமும், உங்களுக்குச் சிகிச்சையளிக்கிற குழுவினரிடமும், மற்றவர்களிடமும் சற்று நேரம் வெளியே செல்லும்படி கேட்கலாம். அதன்பின், உங்களையும், கலந்து கொண்ட மற்ற அனைவரையும் கூட்ட அறைக்குள் வருமாறு அழைப்பார்கள். MHRT அப்போது அவர்களது முடிவை உங்களிடம் சொல்லலாம் அல்லது பின்னொரு நேரத்தில் அவர்களது முடிவை எடுக்க முடிவு செய்யலாம். எந்த நிலையிலும், ஏழு நாட்களுக்குள்ளாக முடிவு குறித்து எழுத்துப்பூர்வமாக உங்களுக்கு கடிதம் அனுப்பி விடுவார்கள்.

## எனது விசாரணைக்குப் பிறகு என்ன நடக்கும்?

எடுக்கும் முடிவிற்கான காரணம் குறித்து எழுத்துப்பூர்வ அறிக்கை ஒன்றைத் தரும்படி உங்களால் கேட்க முடியும். அதை எப்படிச் செய்வது என்பதை, முடிவு குறித்த கடிதத்தோடுள்ள தகவல்களில் கொடுத்து விடுவார்கள் அல்லது நீங்கள் நேரடியாக MHRT தொடர்பு கொள்ளலாம்.

MHRT-யின் முடிவிற்கு எதிராக, முடிவு எடுத்த 60 நாட்களுக்குள் மனநல சுகாதார நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்வதற்கான உரிமையும் உங்களுக்கு இருக்கலாம். இது குறித்த மேலதிகத் தகவல்களை (07) 3082 0554 என்ற எண்ணில் அல்லது registrarmhc@health.qld.gov.au என்ற மின்னஞ்சலில் மனநல சுகாதாரப் பதிவகத்தின் வாயிலாகப் பெற்றுக் கொள்ளலாம்.

## மேலும் தகவல்களுக்கு

MHRT குறித்த மேலும் தகவல்களுக்கு, தயவுசெய்து MHRT இணையதளம் சென்று பாருங்கள்: www.mhrt.qld.gov.au.

(07) 3338 8300
enquiry@mhrt.qld.gov.au